ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2021.11.08 |

**ஏற்றுமதிப் பெறுகைகளை மாற்றுவதற்கான புதிய விதிமுறைகள் நாட்டிற்குப் பல்வேறு நன்மைகளை ஈட்டித்தருவதுடன் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் உள்முக பணவனுப்பல்களில் எவ்வித தாக்கங்களினையும் ஏற்படுத்தாது.**

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து உறுதியான சவால்களை எதிர்கொண்டுள்ள இலங்கை, பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நோக்கிய முனைப்புடனானதொரு பாதையில் தடம் பதித்துள்ளது. உலகளாவிய நோய்த்தொற்று நாட்டிற்கான வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தில் கணிசமானதொரு இழப்பினை விளைவித்த போதும் இறை, நாணய மற்றும் பொது சுகாதார விடயங்களில் அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் வழங்கப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத ஆதரவு பொருளாதாரத்தின் வலுவான மீளெழுச்சிக்கும் அதேபோன்று சில வெளிநாட்டுச் செலாவணியீட்டும் துறைகளில் கணிசமானதொரு மீட்சிக்கும் துணைபுரிந்துள்ளது. சுற்றுலாத் துறையும் எதிர்வரும் காலப்பகுதியில் குறிப்பிடத்தக்கதொரு மீட்சியைக் காண்பிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் முறைசார் வழிகளினூடாக தொழிலாளர் பணவனுப்பல் உட்பாய்ச்சல்களை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெளிநாட்டுச் சந்தையில் காணப்பட்ட அண்மைய பதட்ட நிலைகளும் பொருளாதாரத்தினைப் பல்வேறு வகையிலான அதிர்வுகளுக்கு உட்படுத்தும் அதன் வெளிநாட்டுக் கடன்பாடுகளை அதிகரிப்பதற்குப் பதிலாக இலங்கை காலப்போக்கில் பொருளாதாரத்தினை வலுப்படுத்தும் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் மீது அதனுடைய தங்கியிருக்கும் தன்மையினை அதிகரிப்பதற்கான தேவையினை எடுத்துக்காட்டியுள்ளது.

இச்சூழ்நிலையில், 2021 பெப்ருவரியில், மத்திய வங்கி நாணய விதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் பெறுகைகளின் மீதான தற்போது நிலவுகின்ற மீளனுப்பல் தேவைப்பாட்டினை வலுவூட்டுவதற்கும் குறிப்பிட்டதொரு காலப்பகுதியினுள் அத்தகைய பெறுகைகளின் பெறப்பட்ட பங்கொன்றினது மாற்றலினை உறுதிப்படுத்துவதற்குமான விதிமுறைகளை வெளியிட்டது. அண்டைய நாடுகளின் ஒத்த விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டிருந்த இவ்விதிமுறைகள், வியாபார சமூகத்தினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்களின் பேரில் காலத்திற்குக் காலம் சீராக்கப்பட்டிருந்த அதேவேளை, அவை ஏற்றுமதிப் பெறுகைகளின் மீளனுப்புதலிலும் மாற்றலிலும் படிப்படியான முன்னேற்றத்துடன் உள்நாட்டுச் சந்தை எதிர்கொண்ட வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை சிக்கல்களை ஓரளவு தளர்த்துவதற்குத் துணைபுரிந்துள்ளன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகளினால் மேற்கூறப்பட்ட விதிமுறைகளின் கீழ் மாற்றப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் கட்டாய விற்பனைகளுடன் மத்திய வங்கி ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் சந்தையிலிருந்தான வெளிநாட்டுச் செலாணியின் நியாயமானதொரு அளவினைக் கொள்வனவு செய்வதற்குக்கூடியதாய் அமைந்ததுடன் கடந்த சில வாரங்களில் நாட்டிற்கான அத்தியாவசியப் பண்டங்களின் இறக்குமதிகளுக்குப் பகுதியளவில் நிதியீட்டுவதற்கு இதனை மத்திய வங்கி பயன்படுத்தியுள்ளது.

2021 ஒத்தோபர் 28 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட புதிய விதிமுறைகளின் கீழ், 25 சதவீத குறைந்தபட்ச கட்டாய மாற்று விகிதம் தளர்த்தப்பட்டுள்ளதுடன், அதற்குப் பதிலாக பின்வருவனவற்றிற்காக ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்:

அ) தற்போதைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான வெளிமுக பணவனுப்பல்கள்;

ஆ) வெளிநாட்டு நாணயத் தாள்களில் மீளப்பெறுகைகள், அனுமதிக்கப்பட்டவாறு;

இ) படுகடன் பணிக்கொடுப்பனவுச் செலவுகள் மற்றும் வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்செலுத்தல்;

ஈ) ஒரு மாதகால கடமைப் பொறுப்புக்களுட்பட பண்டங்களின் கொள்வனவுகள் மற்றும் பணிகளைப் பெற்றுக்கொள்ளல்; மற்றும்

உ) இலங்கை அபிவிருத்தி முறிகளில் அவ்வாறு பெறப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் பத்து சதவீதம் வரையிலான வெளிநாட்டு நாணயத்தில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பிலான கொடுப்பனவுகள்

மேற்கூறியவாறு ஏற்றுமதிப் பெறுகைகளைப் பயன்படுத்திய பின்னர் மீதமுள்ளவை இலங்கை ரூபாவாக மாற்றப்பட வேண்டும். ஏனைய பல்வேறு நாடுகளினால் பின்பற்றப்படும் இம்முறையானது, பாரியளவான இறக்குமதிப் பங்கொன்றுடனான ஏற்றுமதிகளுக்குத் தண்டப்பணங்கள் விதிக்கப்படாமலிருப்பதை உறுதிப்படுத்தும் அதேவேளையில் அத்தகைய தொழில்முயற்சிகளின் வெளிநாட்டு நாணய நிதியியல் கடப்பாடுகளைப் பூரணப்படுத்திய பின்னர் உயர்ந்தளவான உள்நாட்டுப் பெறுமதி கூட்டல்களுடனான ஏற்றுமதிப் பெறுகைகளின் பெருமளவானதொரு சதவீதமொன்றிற்கு மாற்றுவதனை இயலுமைப்படுத்துகின்றது.

மேலும், வளர்ந்துவரும் பணிகள் ஏற்றுமதித் துறையின் முக்கியத்துவத்தினையும் அவற்றின் நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு காலத்திற்குக் காலம் அத்தகைய துறைகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சலுகைகளையும் கருத்திற்கொண்டு பணிகள் ஏற்றுமதிகளுக்கும் விதிமுறைகள் நீடிக்கப்பட்டுள்ளன. இவ்வுள்ளடக்கமானது இலங்கைக்கு வெளியே வசிக்கும் ஆளொருவருக்கு வழங்கப்படும் பணிகளுக்கான (தொழில்சார் நிபுணத்துவம், தொழில், உத்தியோகம் அல்லது வியாபாரப் பணிகள் உட்பட) இலங்கையில் வசிக்கும் ஆளொருவரினால் வெளிநாட்டுச் செலாவணியில் பெற்றுக்கொள்ளப்படும் கொடுப்பனவுகளென விதிமுறைகளில் வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, பணிகள் ஏற்றுமதிகளாகக் கருத்திற்கொள்ளப்படாத வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களின் பணவனுப்பல்கள் இவ்விதிமுறைகளுக்கு உட்படமாட்டாது.

வணிகப்பொருள் ஏற்றுமதிகளையும் பணிகள் ஏற்றுமதிகளையும் சமனாகக் கருதும் புதிய விதிகளின் அமுலாக்கம் உள்நாட்டுச் சந்தைக்கு பெருமளவான வெளிநாட்டு நாணய திரவத்தன்மையினை வழங்கி, இலங்கையரினால் நியாயமான செலாவணி வீதமொன்றில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் கொள்வனவு, வெளிநாட்டுக் கல்வி, வெளிநாட்டுப் பயணங்கள் மற்றும் சுகாதாரச் செலவினங்கள் போன்றன உள்ளடங்கலான அத்தியாவசிய கொடுப்பனவுகளுக்கான வெளிநாட்டுச் செலாவணியின் கிடைப்பனவை உறுதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், விதிமுறைகள் வங்கிகளினால் அறிக்கையிடப்பட்டவாறு மாற்றலின் வேறுபட்ட விகிதங்களினூடாக பொருளாதாரத்தின் ஒவ்வொரு வெளிநாட்டுத் துறையினதும் உண்மைப் ''பெறுமதி கூட்டலின்'' அடையாளத்தினை இயலுமைப்படுத்தும்.

ஏற்றுமதியாளர்கள் அவர்களது தொழிற்பாடுகளினூடாக நாட்டிற்கான தேறிய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலினை அங்கீகரித்தும் அத்தகைய பெறுகைகள் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்படும்போது நாட்டிற்குக் கிடைக்கும் நன்மைகளைக் கருத்திற்கொண்டும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பல்வேறுபட்ட வரிச் சலுகைகளையும் ஏனைய அனுகூலங்களையும் அனுபவிக்கின்றனர். இவ்வெதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை உணர்தலின் மூலம் அத்தகைய துறைகளுக்கான சலுகை வழங்கலினை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுப்பதனை இயலுமைப்படுத்தும். வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் முழுமையான மீளனுப்புதலும் மேம்பட்ட மாற்றலும் செலாவணி வீதத்தின் உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்தவும் பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிக்கவும் துணைபுரியும்.